(ஆ) முற்பணம் வழங்கப்படும் திகதிக்கு உடனடுத்த முன்பாக 3 மாதங்களுக்குக் குறையாதவாறு தொடர்ச்சியான சேவையையுடையவரும், பதவிநிலைத் தரத்தைச் சேராதவரும் தற்காலி அல்லது தமய அடிப்படையில் சேவைபுரியவரும் கடன் திருப்பிப் பெறப்படும் முழுக் காலப் பகுதி(உதா -: குறைந்தது 1985 டிசம்பர் இறுதிவரையில் தொடர்ந்து சேவை புரிவார் என்பதற்கான உறுதியுடையவர்களுமான அரசாங்க உத்தியோகத்தர் இந்த விசேட முற்பணத்தைப் பெறத் தகுதியுடையவராவார்.

02. 1977ஆம், 1978ஆம், 1979ஆம், 1980ஆம், 1981ஆம், 1982ஆம் 1983ஆம், 1984ஆம் ஆண்டுகளிற் தாம் பெற்ற ஏதம் விசேட வங்கிக் கடன்கள் தொடர்பில் தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறிய ஓர் அரசாங்க உத்தியோகத்தர் 1985ஆம் ஆண்டுக்கான இவ்விசேட முற்பணத்தைப் பெறத் தகுதி உடையவராகார்.

03. இவ்விசேட முற்பணத்திற்கான விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட படிவத்தில் அமைதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

04. இம்முற்பணம் 01.01.1985ஆந் திகதிக்கும் 28.02.1985 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொடுத்து முடிக்கப்படுதல் வேண்டும். 28.02.1985 ஆம் திகதிக்குப் பின்னர் எவ்வித கொடுப்பனவும் செய்யப்படுதலாகாது.

05. இம்முற்பணம் " அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு-பி " என்பதில் பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

06. இம்முற்பணம் ஆண்டொன்றுக்குப் 13 சதவீதப்படி சமனுக்கிய மாதாந்த வட்டியுடன் சேர்த்து, சம தொகையைக் கொண்ட 10 மாதாந்தத் தவணைக் கட்டணங்களில் அறவிடப்படுதல் வேண்டும். 300/-ரூபா முற்பணத்துக்குரிய சமனுக்கிய மாதாந்த வட்டி 1 ரூபா 80 சதம் என நிர்ணயிக்கப் பெற்றுள்ளது. 300/- ரூபாவுக்குக் குறைந்த முற்பணங்களின் தொடர்பில் விகிதாசாரப்படியான சமனுக்கிய மாதாந்த வட்டி அறவிடப்படுதல் வேண்டும்.

07. 238 ஆம் நிதி ஒழுங்குவிதி, தாபனக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 3ஆம் பிரிவு என்பவற்றிற் குறித்துரைக்கப்பட்டுள்ள 40 சதவீத அல்லது 33-1/3 சதவீத எல்லையிலிருந்து இம் முற்பணம் பேரிற் செய்யப்படும் அறவிடுதல்களுக்கு விலக்களிக்கப் பெற்றுள்ளது.

08. முதல் சார் தவணைக்கட்டண அறவிடுதல்கள், இம்முற்பணம் கொடுத்ததற்குக் காரணமாகிய " அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு பி" என்பதில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். வட்டிசார் அறவிடுதல்கள் அரசிறைத் தலைப்பு-5; கிடைக்கப் பெற்ற வாடகை, வட்டி, இலாபம், பங்கிலாபம், உபதலைப்பு 2 வட்டி, விடயம் 4: பிற என்பதற்கு வரவு வைக்கப்பட்டு, புறம்பாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 268

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
25. செத்தெம்பர் 1984.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

<u>அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணம் - 1985</u>

பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு 1985 ஆம் ஆண்டில் 300/- ரூபாவுக்கு மேற்படாத விசேட முற்பணமொன்றைக் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(அ) பதவிநிலைத் தரங்களைச் சேராத எல்லா நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்களும் இந்த விசேட முற்பணத்தைப் பெறத் தகுதியுடையவர்கள். பதவி நிலைத் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் எனப்படுபவர் வருடமொன்றுக்கு 13,800/- ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட புதிய திரட்டிய ஆரம்பச் சம்பளத்தையுடைய வரும் வருடாந்த சம்பள ஏற்றமாக 480/- ரூபாவைப் பெறுபவருமான ஒரு அரசாங்க உத்தியோகத்தராவர்.

09. "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு" என்பதிலிருந்து கொடுக்கற்பாலனவாகிய விழா முற்பணங்களோடு அல்லது ஏனைய முற்பணங்களோடு அல்லது 1977ஆம், 1978ஆம், 1979ஆம் ஆண்டுகளில் வழங்கப் பெற்ற விசேட வங்கிக் கடன்களோடு இவ்வறவிடுதல்களைக் கலத்தலாகாது.

10. கொடுப்பனவையும், மற்றும் முதல்சார் தவணைக்கட்டணங்கள் சமமாக்கிய மாதாந்த வட்டி என்பவற்றின் அறவிட்டையும் பதிவதற்கு வடிவம் சிசி 10 என்பதிலான புறம்பான பதிவேடொன்று வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

11. அவசியமானவிடத்து, 503ஆம் நிதி ஒழுங்கு விதியின் பிரகாரமும், 05.03.1984ஆந் தேதியிட்ட 22 ஆம் இலக்கத் திறைசேரி சுற்றறிவிப்பு நிருபத்தின் பிரகாரமும் முற்பணக் கணக்கின் எல்லைகளை மீளாய்வதற்குத் திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

12. இவ் விசேட முற்பணம் கொடுக்கப்படுவது காரணமாக 1985 ஆம் ஆண்டில் விசேட வங்கி முற்பணம் கொடுக்கப்படமாட்டாது.

13. இடமாற்றஞ் செய்யப்படும் அரசாங்க உத்தியோகத்தரொருவர் சம்பந்தமாக, முற்பணக் கணக்கிலிருந்து கொடுக்கப்படும் முற்பணங்களின் அறவிடுதல்கள் தொடர்பில் வழமையாகப் பின்பற்றப்படும் நடைமுறை கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். அதாவது குறித்த முற்பணத்தின் நிலுவை மீதியை அவ்வுத்தியோகத்தரை விடுவிக்குந் திணைக்களத்திற்கு அவ்வுத்தியோகத்தர் மாற்றப்பட்டுள்ள திணைக்களம் அதன் "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு-பி, [illegible] பற்று வைப்பதன் மூலம் கொடுத்தல் வேண்டும். அதன் பின் தவணைக் கட்டணங்களின் அறவிடுதல்கள் தொடர்ந்து செய்யப்படுவதுடன், எச் சந்தர்ப்பத்திலும் 1985 திசெம்பர் மாத இறுதியளவில் அறவிடுதல்கள் செய்து முடிக்கப்படுகின்றனவென்பதை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

14. இத் திட்டத்தின் கீழ் முற்பணமொன்றைப் பெற்ற பணியாளரொருவர் பணியில்லாது போகுமிடத்து, அத்தகைய பணியாளரிடமிருந்து அறவிடப்படாதிருக்கின்ற (சமனாக்கிய வட்டியுட்பட) நிலுவையாகவுள்ள முற்பண மீதி அவரின் ஓய்வூதியம்/ ஏற்பாட்டு நிதியம்/எம்ப்பனம்/பணிக்கொடை அல்லது அவருக்குக் கொடுக்கற்பாலனான வேறேதேனும் பணத்திலிருந்து அறவிடப்படுகின்றதென்பதையும், அவர் ஒரு தற்காலிகப் பணியாளராயின், அவரின் கடைசி மாதச் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்றதென்பதையும் சம்பளத் தாபனக் கூறுகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

15. இச்சுற்றறிக்கையின் பொருளடக்கத்தை இம் முற்பணத்தைப் பெறத் தகுதியுடையவர்களான உங்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்களின் கவனத்திற்குக் கொண்டு வருக.

16. பொதுத் திறைசேரியின் இசைவுடன் இச்சுற்றறிக்கை விடுக்கப்படுகின்றது.

ஒப்பம்: எம். எஸ். ஜே. [illegible]

தாபனப் பணிப்பாளர்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

## அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணம் - 1985

1. விண்ணப்பகாரரின் முழுப் பெயர் :-
2. திணைக்களம் :-
3. பதவிப் பெயர் :-
4. அலுவலக முகவரி :-
5. 1977ஆம், 1978ஆம், 1979ஆம் ஆண்டுகளில் பெற்ற விசேட வற்கிக் கடன்கள், மற்றும் 1980ஆம், 1981ஆம், 1982ஆம், 1983ஆம், 1984ஆம் ஆண்டுகளில் பெற்ற விசேட முற்பணங்கள் என்பன பற்றிய விபரங்கள் :-

"நான் பெற்ற விசேட முற்பணம் முழுவதையும், அவற்றிற்குரிய வட்டி சேர்த்து, எம் முழு ஆண்டுகள் சம்பந்தமான அக்கடன்களை நான் பெற்றேனோ அம் முழு ஆண்டுகளின் டிசெம்பர் மாதம் 31 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ திரும்பச் செலுத்திவிட்டேனென்று வெளிப்படுத்துகின்றேன்.

..........................

விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :-

ந/11